# <u>தொழில் வரி விதிப்பு குறித்து பொதுமக்களால் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ)</u>

1.மாநகராட்சிக்கு தொழில்வரி செலுத்த தகுதியானவா்கள் யாா் யாா்?

மாதாந்திர ஊதியமாக ரூ.3,500/- க்கு மேல் அதாவது 6 மாத வருமானமாக ரூ. 21,000/-க்கு மேல் பெறப்படும் அனைத்து தனிநபா் மற்றும் நிறுவனம்

2. நிறுவனத்திற்கு தனியாக தொழில்வரி செலுத்தப்பட வேண்டுமா?

ஆம். 6 மாத வருமானமாக ரூ. 21,000/-க்கு மேல் ஈட்டக்கூடிய நிறுவனங்கள் மாநகராட்சிக்கு தொழில்வரி செலுத்தப்பட வேண்டும் ?

3. தொழில்வரி செலுத்துவதிலிருந்து யாா் யாருக்கு விலக்கு உள்ளது ?

கோயம்புத்துாா் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 169 Hன்படி,

i. முப்படைகளில் தற்போது பணிபுரிந்து வரும் அனைத்து நிலை அலுவலா்கள்
ii. மாற்றுத்திறனாளிகள் (அரசு சிவில் சா்ஜனிடம் மருத்துவ சான்றிதழ் பெற்ற மாற்றுத்திறனாளிகள் மட்டும்)
iii. மத்திய பாதுகாப்பு காவல் (CRPF) துறையில் பணிபுரிகின்ற அனைத்து நிலை அலுவலா்கள்

4. அமைப்புசாரா தொழிலாளா்களுக்கு தொழில்வரி விதிக்கப்படுகிறதா?

இல்லை

5.மாநகராட்சிக்கு ஆண்டுக்கு எத்தனை முறை, எந்தெந்த மாதங்களில் எந்த வரிவிகிதங்களில், எந்த பெயருக்கு தொகை செலுத்தப்பட வேண்டும் ?

வருடத்திற்கு 2 முறை அதாவது பிரதிவருடம் பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் தொழில்வரி பிடித்தம் செய்து **“ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி”** என்ற பெயரில் கீழ்க்கண்ட விகிதத்தில் தொழில்வரி தொகை செலுத்தப்பட வேண்டும்

| வ.எண். | சராசரி அரையாண்டு மொத்த வருமானம் | அரையாண்டு தொழில் வரித்தொகை |
|---|---|---|
| 1. | ரூ. 21000/- வரை | இல்லை. |
| 2. | ரூ. 21001/- முதல் ரூ.30000/- வரை | ரூ.98.00 |
| 3 | ரூ. 30001/- முதல் ரூ.45000/- வரை | ரூ.244.00 |
| 4. | ரூ. 45001/- முதல் ரூ.60000/- வரை | ரூ.488.00 |
| 5. | ரூ. 60001/- முதல் ரூ.75000/- வரை | ரூ.731.00 |
| 6. | ரூ.75001/- மேல் | ரூ.975.00 |

6.தொழில்வரி செலுத்துவதற்கான குறைந்தபட்சம் மற்றும் அதிகபட்ச தொகை யாது ?

நிறுவனத்திற்கு அதிகபட்சமாகரூ.975/-ம், தனிநபர் மற்றும் பணியாளர்களுக்கு அவர்களின் அரையாண்டு வருமானத்திற்கு ஏற்றவாறு குறைந்தபட்சமாக ரூ.98/-ம், அதிகபட்சமாக ரூ.975/-ம் அரையாண்டு தொழில்வரித் தொகை செலுத்தப்பட வேண்டும்.

7. தொழில்வரி செலுத்தாதவர்கள் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்ன?

வருடத்திற்கு 12% அபராதம் மற்றும் குடிநீர் இணைப்பு துண்டிப்பு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

8. மாநகராட்சியின் எல்லைக்கு அப்பாலுள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் எங்கு தொழில்வரி செலுத்த வேண்டும் ?

மாநகராட்சிக்கு செலுத்தப்படவேண்டியது இல்லை, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் மட்டுமே செலுத்தப்படவேண்டும்.

9. தொழில்வரி செலுத்த எங்கு விண்ணப்பிக்க வேண்டும்? எங்கு எவ்வாறு தொகை செலுத்தப்பட வேண்டும் ?

சம்பந்தப்பட்ட மண்டல வரி வசூல் மையங்களில் ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி என்ற பெயரில் காசோலையாகவோ, வரைவோலையாகவோ, வங்கி வரைவோலையாகவோ, வங்கி கடன் அட்டை மூலமாகவோ மற்றும் ரொக்கமாகவோ செலுத்தலாம்.

10. தொழில்வரி செலுத்துவதற்குண்டான மாநகராட்சியின் சட்ட விதி மற்றும் பிரிவு என்ன?

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 169 A முதல் I வரை

10. வெளிமாவட்டத்தில் அலுவலகம் அமைந்து கோவை மாநகாராட்சி எல்லைக்குள் உள்ள கிளை அலுவலகத்தில் பணி செய்யக்கூடியவா்கள் எங்கு தொழில்வரி செலுத்தப்பட வேண்டும் ?

கோவை மாநகராட்சி எல்லைக்குள் பணிபுரியும் நபா்களுக்கு கோவை மாநகராட்சியில் செலுத்தப்படவேண்டும்.

11. மண்டல அலுவலகங்களின் அமைவிடம் என்ன?

| **மண்டலம்** | **வாா்டு எண்கள்** | **தொலைபேசி எண்** |
|---|---|---|
| கிழக்கு | **32,33,34,35,36,37,56,57,58,59, 60,61,62,63,64,65,66,67,69,75** | 2577056 |
| மேற்கு | **5,6,7,8,9,10,11,12,13,14,15,16,17,18,19, 20,21,22,23,24** | 2551700 |
| வடக்கு | **1,2,3,4,26,27,28,29,30,31,38,39, 40,41,42,43,44,46,47,55** | 2243133 |
| தெற்கு | **76,77,78,79,85,86,87,88,89 , 90,91,92,93,94,95,96,97,98,99,100** | 2252482 |
| மத்தியம் | **25,45,48,49,50,51,52,53,54,68, 70,71,72,73,74, 80,81,82,83,84** | 2215618 |